FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120379

1. District : T.T.கோடு — PS: லஞ்ச ஒழிப்பு — Year: — FIR No.: 01/AC/2026 — Date: 02.3.2026
மாவட்டம் — காவல்நிலையம் T.T.கோடு — ஆண்டு 2026 — முத.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act — Sections பிரிவுகள்: 7(b)

(ii) Act சட்டம்: 1988 as amended by the — Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : — Date from : 21.02.2026 நாள் முதல் — Date to : 28.02.2026 நாள் வரை
குற்ற நிகழ்வு நாள்

Time Period : — Time from : — Time to :
நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை

(b) Information Received at PS. Date : 02.03.2026 — Time : 07.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்

(c) General Diary Reference : Entry No(s) GD Vol-I — Time : 07.00 மணி
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக (கோணல் ஒப்படைக்கப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 40 கி.மீ. மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : உளுந்தப்பட்டு அலுவலகம், திக்காம்பாளையம் —
முறைக் காவல் எண் — முகவரி உளுந்தப்பட்டு, பெரிய்ந்தனை வட்டம், T.T.கோடு மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. தினேஷ்பாபு — (b) Father's/ Husband's Name : சண்முகம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1980 — (d) Nationality : இந்தியன் — (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : வேலை — (g) Address : 225/1, சிதம்பரங்காடு புதூர், நெடுவக்கோர், அனிணை, திருப்பூர் மாவட்டம்.
தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. மாரி சுவாமி உளுந்தப்பட்டு அலுவலர், திக்காம்பாளையம் கிராமம், பெரிய்ந்தனை வட்டம், T.T.கோடு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

தனித்தாளில் கண்ணியமாக சுருக்கம் செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

02/3/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

2/3/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 02.03.2026 03.30 hrs.

Name: பெயர் M. தேவா
Rank: நிலை தலைமைக் காவலர் No. எண் .....
உ.த.க. மிரிச, ராஜாடு.

Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 01/AC/2026 u/s 7(b) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M.ரேகா ஆகிய நான் 02.03.2026 தேதி காலை 07.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.S.தினேஷ்பாபு, த/பெ சண்முகம், 225/1, கருக்கங்காட்டுப்புதூர், நடுவச்சேரி, அவினாசி, திருப்பூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் S.தினேஷ்பாபு, த/பெ சண்முகம், 225/1, கருக்கங்காட்டுப்புதூர், நடுவச்சேரி, அவினாசி, திருப்பூர் மாவட்டம். பெறுநர் உயர்திரு.விஜிலென்ஸ் ஆய்வாளர் அவர்கள், விஜிலென்ஸ் அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு. அய்யா, நான் மேற்படி முகவரியில் உள்ள எனது வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் டைலர் தொழில் செய்து வருகிறேன். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சொந்த ஊர் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம், திங்களூர் அருகில் உள்ள நிச்சாம்பாளையம் ஊராட்சியை சேர்ந்த கொட்டையன்கருக்குபுதூர் என்ற கிராமம் ஆகும். அங்கே கதவு எண் 1/125 என்ற முகவரியில் எனது அப்பா சண்முகம் அவர்களுக்கு சொந்தமான ஒரு வீடு உள்ளது. எனது அப்பா கடந்த 19.12.2017ம் தேதி இறந்துவிட்டார். எனது அம்மா மாதேஸ்வரி தற்போதும் அதே வீட்டில்தான் குடியிருந்து வருகிறார். தற்போது அந்த வீட்டை எனது பெயருக்கு மாற்றிக்கொள்ளுமாறு எனது அம்மா சொன்னார். அதற்காக கடந்த 21.02.2026ம் தேதி மதியம் நிச்சாம்பாளையம் பஞ்சாயத்து அலுவலகம் சென்று எனது அம்மா மாதேஸ்வரி அவர்கள் அங்கிருந்த பஞ்சாயத்து கிளர்க் மாரிசாமி அவர்களை பார்த்து விபரம் கூறி எனது அப்பாவின் இறப்பு சான்று, வாரிசு சான்று மற்றும் இதர ஆவணங்களின் நகல்களை கொடுத்து சொத்துவரியை எனது பெயருக்கு மாற்றிக்கொடுக்குமாறு கேட்டு விண்ணப்பித்துள்ளார். எனக்கு அவினாசியில் வேலை இருந்ததால் நான் நேரில் செல்ல முடியவில்லை. அதனால் நான் பஞ்சாயத்து கிளர்க் அவர்களின் செல்போன் எண் 9942195089 என்ற எண்ணுக்கு போன்செய்து எனது அம்மா வந்திருக்கும் விபரத்தை தெரிவித்து வீட்டுவரி பெயர் மாற்றம் செய்துகொடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் அதனை தான் பார்த்துக்கொள்வதாகவும், அதற்கு 6000 ரூபாய் செலவாகும் என்றும் பணத்தை எப்போது கொடுப்பீர்கள் என்றும் கேட்டார். நான் என்னிடம் தற்போது பணம் இல்லை என்றும், நீங்கள் வேலையை முடித்துக்கொடுங்கள் என்றும் சொன்னேன். அப்போது அவர் பணம் கொடுத்தால்தான் சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய ஏற்பாடு செய்ய முடியும் என்று சொல்லி, உங்களிடம் இப்போது எவ்வளவு இருக்கிறது என்று கேட்டார். என்னிடம் தற்போது 2000

ரூபாய்தான் இருக்கிறது என்று சொன்னதும், சரி அந்த பணத்தை எனக்கு பேசிக்கொண்டிருக்கும் அதே நம்பரில் கூகுள்பேயில் அனுப்பிவையுங்கள், மீதி பணம் 4000 ரூபாயை வேலைமுடிந்ததும் கொடுத்துவிடுங்கள் என்றும் சொன்னார். வேறு வழியில்லாததால் நானும் சரி என்று சொல்லிவிட்டு, நான் அவினாசியில் இருப்பதால் என்னால் நேரில் வரமுடியாது என்றும், இந்த சொத்துவரி பெயர்மாற்றம் தொடர்பாக திங்களூரில் உள்ள எனது தூரத்து உறவினர் தமிழரசன் என்பவரை அனுப்பிவைப்பதாகவும் அவர் வந்து உங்களை பார்த்துக்கொள்வார் என்றும் தெரிவித்தேன். மேலும் அவர் கேட்டபடி, கூகுள்பே நம்பருக்கு 2000 ரூபாயை அன்றைய தினம் மாலை சுமார் 4.45 மணியளவில் அனுப்பிவிட்டேன். அதன்பின்பு அவரிடம் பலமுறை போனில் பேசி சொத்துவரி பெயர்மாற்றம் பற்றி விசாரித்தபோது அவர் இன்று, நாளை என்று இழுத்தடித்துக்கொண்டே இருந்தார். அதன்பின்னர் கடந்த 25.02.2026ம் தேதி எனது அம்மாவையும் எனது உறவினர் தமிழரசனையும் நேரில் சென்று பார்க்கும்படி சொன்னதின் பேரில் எனது அம்மா அன்று மதியம் பஞ்சாயத்து அலுவலகம் சென்று பஞ்சாயத்து கிளர்க் மாரிசாமியை பார்த்துள்ளார். அவர் எனது அம்மாவை காத்திருக்கசொல்லியுள்ளார். அன்று மாலையில் எனது உறவினர் தமிழரசனும் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று மாரிசாமி அவர்களை பார்த்து பேசியுள்ளார். அவரிடம் மாரிசாமி ஆர்டர் ரெடியாகிவிட்டதாகவும், சொத்துவரி பெயர்மாற்ற கட்டணமாக 300ரூபாய் செலுத்தவேண்டும் என்று சொல்லி 300 ரூபாயை அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு அதற்கான ரசீதையும் கொடுத்துள்ளார். அதன்பின்னர் சொத்துவரி பெயர்மாற்ற உத்தரவையும் பிரிண்ட் எடுத்து அன்றையதினமே தமிழரசனிடம் கொடுத்துள்ளார். சுமார் 6.30 மணிக்கு மாரிசாமி அவர்கள் எனக்கு போன் செய்து சொத்துவரி பெயர்மாற்றம்செய்து உத்தரவு போடப்பட்டுவிட்டதாக சொல்லிவிட்டு, தமிழரசன் எதுவும் கவனிக்கவில்லை, எனவே ஏற்கனவே கேட்டிருந்த மீதிபணம் 4000 ரூபாயை எனக்கு கூகுள்பே செய்யுமாறு கேட்டார். நான் அதுசம்மந்தமாக தமிழரசனிடம் கேட்டுக்கொள்ளுங்கள், நான்அவரை பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டேன் என்று சொன்னேன். அதன்பின்னர் மாலை சுமார் 6.40 மணியளவில் மாரிசாமி அவர்கள் தமிழரசனின் செல்போனுக்கு போன் செய்துள்ளார். அவர் அதை எடுப்பதற்குள் போன் கட் ஆகிவிட்ட காரணத்தால் தமிழரசன் மீண்டும் மாரிசாமிக்கு போன்செய்து கேட்டபோது, சொத்துவரி பெயர்மாற்றம் செய்தது சம்மந்தமாக உங்களை பார்த்துக்கொள்ளுமாறு தினேஷ் சொல்லிவிட்டதாக விபரத்தை தெரிவித்து, பாக்கி பணம் 4000 ரூபாயை கேட்டுள்ளார். அதற்கு தமிழரசன் ஏ.டி.எம் வரை சென்றுவிட்டு வருவதாக சொன்னதும் கூகுள்பேயில் அனுப்பிவையுங்கள் என்று கேட்டுள்ளார். அதற்கு அவர் எனது கூகுள்பே வேலை செய்யவில்லை என்று சொன்னதும் சரி சீக்கிரம் ஏற்பாடு செய்துகொண்டு வாருங்கள், நான் அலுவலகத்தில்தான் இருப்பேன் என்று சொல்லியுள்ளார். அதன்பின்னர்

மறுநாள் 26.02.2026ம் தேதி காலை சுமார் 8.10 மற்றும் 9.00 மணியளவில் மாரிசாமி அவர்கள் தமிழரசனின் செல்போனுக்கு கூப்பிட்டுள்ளார். அவசர வேலையில் இருந்ததால் தமிழரசன் அதை எடுக்கவில்லை. அதன்பின்னர் மேற்படி மிஸ்டுகாலை பார்த்து சுமார் 9.10 மணியளவில் திரும்ப அழைத்து பேசியபோது மாரிசாமி அவர்கள் பணம் என்னாச்சு என்று கேட்டுள்ளார். நான் அவசரவேலையாக இருப்பதால் தற்போது வரமுடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் கூகுள் பேயில் கூட அனுப்பிவையுங்கள் என்று சொல்லிவிட்டு, எனக்கு கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது, நீங்கள் நாளை கண்டிப்பாக கூப்பிடுங்கள் என்று சொல்லிவிட்டு போனை கட் செய்துவிட்டார். அதன்பின்னர் 28.02.2026ம் தேதி காலை சுமார் 11.40 மணியளவில் தமிழரசன், மாரிசாமி அவர்களை திரும்ப அழைத்து பேசியபோது மாரிசாமி அவர்கள் பணம் என்னாச்சு, வேலை முடிந்துவிட்டது என்று நினைத்துவிட்டீர்களா, மீண்டும் வேறுவேலைக்கு என்னிடம் வந்துதான் ஆகவேண்டும் என்று சொல்லியுள்ளார். அவசர வேலையாக வெளியூர் வந்திருப்பதாகவும், தன்னால் வந்து பணம் தரமுடியவில்லை என்று சொன்னதும், பரவாயில்லை, 02.03.2026 ம்தேதி திங்கள்கிழமை அலுவலகத்திற்கு வந்து மீதி பண்தை கொடுத்துவிடுங்கள் என்று சொல்லியுள்ளார். மேற்படி நிச்சாம்பாளையம் பஞ்சாயத்து கிளர்க் மாரிசாமிக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்து கொடுத்தமைக்காக லஞ்சமாக 4000 ரூபாய் பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே மேற்படி பஞ்சாயத்து கிளர்க் மாரிசாமி மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு கையொப்பம் XXXX (S.தினேஷ்பாபு) 2/3/26.

Sir, Received the above said computer typed complaint on 02.03.2026 at 07.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The reliability and the antecedents of the complainant were found to be genuine and the accused reputation was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2026 u/s 7(b) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 today on 02.03.2026 at 08.00 hrs. Sd/- (xxxxxxxx) 02.03.2026 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.S.Dineshbabu, S/o Shanmugam, 225/1, Karukkangattupudur, Naduvacheri, Avinasi, Tiruppur District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

02/3/26

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.